உ

கடவுள் துணை.

# மாட்டின்
# வாகடக்கண்ணாடி.



இவை - திருமணலூர்

முனிசாமிமுதலியாரா லியற்றியதை

சூளை - முனிசாமிமுதலியாரால்,

பூவிருந்தவல்லி,

**சுந்தரமுதலியாரது,**

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1889.

Registered Copy Right.

1997
636.2

உ

கடவுள் துணை,

# ரிஜஸ்தர் அறிவிப்பு.

இந்த (மாட்டின்வாகடக் கண்ணாடியை) இயற்றிய சென்னை புரசை சுந்தரப்பிள்ளைவீதி, 15-வது, நெம்பர் வீட்டிலிருக்கும், திருமணலூர்-முனிசாமிமுதலியாரவர்களும், இதற்கு பொருளுதவிமுயற்செய்து அச்சிலேயிட்ட சென்னை ஆனைகலையார்குட்டைவீதியில் 20-வது நெம்பர்வீட்டிலிருக்கும், முனிசாமி முதலியாரும், ஆகிய இவ்விருவர்கள் அனுமதியின்றி அச்சிலேபதிப்பிக்கின்றவர்களும், பதிப்பிக்கும் அச்சுக்கூடத் தலைவர்களும் 1867௵த்து 25-வது, ஆக்டின் 20-வது, பிரிவில் 6-வது, விதியின்படி நஷ்டத்திற்குத்திரவாதிகளாகவும் பிறுஸ்கோர்ட்டார் அவர்கள் கேள்விக்கு ஜவாபுதாரர்களாகவு மிருப்பார்களென்று யாவரும் தடையின்றி கவனிப்பீர்களாக.

இந்த மாட்டின்வாகடக் கண்ணாடி, ஜாலக்கண்ணாடி, 1-பாகம், 2-ம் பாகம், வயித்தியக்கண்ணாடி, 1-பாகம், 2-ம் பாகம், ருதுநூல்சாஸ்திரம், கனவுசாஸ்திரம் சகுனப்பட்சிசாஸ்திரம், விநோதவிடுகதை, பார்த்தசாரதிமாலை, நடேசர்பதிகம், மீனாக்ஷியம்மன் உயிர்வருக்கமாலை, பழனியாண்டவர் ஆனந்தக்களிப்பு, கலிகாலக்கண்ணாடி, பாத்தைபார்மாலை, பழனியாண்டவர் பதிகம், பூ[illegible]கிராவுகோல், தலைவிதிகீர்த்தனை, சங்கரமாலை, பெ[illegible]திமாலை, சிறுத்தொண்டர்விலாசம், இந்திரசபா இன்னும் பலவித தமிழ் சில்லரைபுத்தகங்களும் சென்னை ஆனைகலையார்குட்டைவீதி, 20-வது, நெம்பர்வீட்டிலிருக்கும் முனிசாமி முதலியாரிடத்தில், விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம், இன்னும் அநேகம்வரும்.

இப்படிக்கு,

குளே-முனிசாமிமுதலியார்.

உ

கடவுள்துணை.



# மாட்டுக்குவயித்தியம்.

பொது - விருத்தம்.

மனிதருக்குநோய்வந்தால் சொல்லுவார்கள்
மந்திரமும்வாகடமும் வந்தபேர்கள்
இனிதானபால்கொடுக்கும் பசுக்களுக்கும்
யெருதுக்கும்நோய்வந்தால் சொல்லேதையா
அனியாயமாய்மடிந்து போகுமென்று
அப்பனேசிறுமணலூர் முனிசாமிதான்
கனிந்தபழம்போலுரைத்த முறைசெய்வோர்க்கு
கணபதியும்முன்னிருந்து காப்பார்தானே. 1

{ அசீரணநோயின் குணம், தின்றவிரைபோலவே சாணம்போடும் அடிக்கடி காத்தபசியும். நிவர்த்தி. }

காற்பதற்குமிளகுசெவ்வி பலமேனக்கு
கண்மணியேவெத்திலையில் பலந்தானஞ்சு
சேர்த்திடிச்சு அரைத்துவெந்நீரில்தாக்கி
செலுத்தப்பாஉள்ளுக்கு காலைவேளை
பார்த்திந்தப்படிமூன்று நாளுஞ்செய்து
பக்குவமாய் கழுத்திலேசூடும்போடு
தீர்க்கவேபுண்ணியங்கள் மெத்தவுண்டு
பின்னொருநோயகலபாகஞ்சேனே.

1997
654.2

(வ-ம்.) வெற்றிலை ௫-பலம், மிளகு உ-பலம், ஒன்றாயரைத்து கா
டிவெந்நீரில்கலக்கி உள்ளுக்குபுகட்டவும் இந்தப்படி மூன்றுநா
கொடுக்கத்தீரும், மேற்கண்டிருக்கும்சூட்டைகழுத்தைசுத்திசுடவு

---

கக்கல்நோயின்குணம், தின்றதீவனத்தை அப்பித்தள்ளும்
அடிக்கடிக்கு உடம்பு மெலியும்.
நிவர்த்தி.

பாகங்கேள்வசம்புஒரு பலமுங்குப்பை
மேனியிலை நாலுபிடி கூடச்சேர்த்து
பாகங்கேள்யிரண்டையுமே மைபோலாட்டி
பசும்பாலில்கலக்கியிதை உள்ளுக்கேகொடு
வேகமாய்கொள்ளாட்[illegible]றுத்திடாதே
வெதுப்புமடாநோயினுட துன்பத்தாலே
போனாட்டால்யென்னையும்நீ நிந்திக்காதே
புகலுகிறேனின்னமொரு முறையுஞ்சூடும் 3

குப்பைமேனியிலை ச-பிடியும், வசம்பு ஒருபலமும் ஒன்றாய் அ
ரைத்து பசும்பாலில் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள்
கொடுக்கத் தீரும்.

வேறுமுறை,

(வ-ம்,) சாதாரணமாய் காக்கையைபிடித்து கால் தலை
குடல் சோமம் எலும்பும் நீக்கி மற்றதையிடித்து காடி
யில் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுவேளை செய்
யத் தீரும் யிடதுவிலாவில் இதில்கண்டபடி சுடவும்.



சீதபேதியுப்புநோயின் குணம்,
சர்க்கரை வாயில் இடைவிடாமல் கற்றாழைசோறுபோல்
வடிந்துக்கொண்டேயிருக்கும் பின்னங்கால்நடுங்கும்,
நிவர்த்தி.

முருங்கையிலைசாறுபடி ஒன்றுதாக்கு
முன்[illegible]காடிமூன்றுபடியில்தாக்கு

சரியாகவெண்டிபலம் வெளிச்சிப்பட்டை
 சாதித்துமெழுகுபோ லரைத்துக்கொண்டு
கருவாகமூன்றுவுரைத்த வஸ்துவோடே
 கலக்கியதைஉள்நாக்கு புகட்டிவிட்டு
அரித்துக்கொள்ளிதிகிருக்கும் குடுபோலே
 அம்மையவிடதுவிலா தணிஞ்சிபோடே. 4

(வசம்.) முருக்கிலைச்சாறு கஃபடியும், காடி கஃபடியும் கலந்து அதி லேவெளிச்சிப்பட்டை உஃபலம் அரைத்துப்போட்டு குடிப்பாட்டத் தீரும் விடாதவிலாவில் ருடுபோடவும்.

---

{ பேரகத்திநோயின்குணம்.
வலிப்புதோன்றும் காலை அக்கிக்கொண்டிருக்கும் வாயில்
நீர்வடியும் பிளவலாய் சாணம்போடும் புல்தின்றது.
நிவர்த்தி. }

பொன்முசட்டைசமூலமடா பலந்தான்பத்து
 போட்டெலில்லரிஜாமம் பிடித்தேதப்பால்
பின்னமிலாபசும்பாலை விட்டுபிதான்
 பிழிந்துஅரைப்படிசடிதே வெடுத்துக்கொண்டு
மூன்றுவாரத்தகோயுள்ள பெருந்தகாடு
 மூன்றுளுள்புகட்டிடவே தீருந்தீரும்
இன்னபடிகுடிகற்கு விபரமாக
 இடாவிலாதணிற்போட நோய்தானேது, 5

(வசம்) பொன்முசட்டைசமூலம் ௰ - ² பலங்கொண்டுவந்து உரலி ல்போட்டு பிடித்து பசும்பால் விட்டுவிட்டு பிசைந்து அரைபடி சடம் பிழிந்துக்கொண்டு உள்நாக்கு புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் செய்யவும் குட்டை விடாதவிலாவில் போடவும்.

---

{ எலும்புருக்கிநோயின் குணம்.
வெக்காணம்போலேர்.
நிவர்த்தி. }

தும்மைபிலைசாறுபிடி புரிவிவந்து
 அகளமல்லைபோலே அரைத்துக்கொண்டு
வம்பேதுகாடிவென்ற கஞ்சிக்காச்சி
 வளமாகஅரைத்தவுண்டை போட்டுக்கிண்டி

தம்பிநீ பெருதுக்கு மிதுவேபாகம்
தக்கபடி மூன்றுநாள் புகட்டிடப்பால்
கம்பிதனைகாச்சிபிட்ட விளாவுதன்னில்
கண்டபடிபிசகாமல் சூட்டிப்போடே



(வ-ம்.) தும்பயிலையில் ௨-பிடி கொண்டு வந்து அரைத்து காடிக்கஞ்சியில் கலக்கிபுகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் செய்யவும்.

---

பேதிநோயின்குணம்.
வயிற்றைடையும் வாயில்நீர்வடியும் சாணங்காறும்
கல்லைப்பீளைறுமும் நிவர்த்தி.

மலராதஎருக்கம்பூ பலந்தானஞ்சி
மைந்தனே நல்லசீரகந்தான்பாதி
கலந்திரண்டும்ஒன்றாக அரைத்துக்கொண்டு
காடியிலேகலக்கியதை புகட்டிப்போடு
விலகுமடா மூன்றுநாள் மருந்தையிந்து
விடமாய்சூட்டது விளாவிலபோட்டால்
தலமதனல்கோய்நீங்கி பெருதுமீளும்
கருமமிதைவிடவேறே வுலகிலுண்டோ.



7

(வ-ம்.) எருக்கம்பூ மலராத பக்குவமாயுள்ளது ரு-பலம், நல்லசீரகம் உ-பலம், ஒன்றாய் அரைத்து காடியிலேபோட்டுக் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் தரவும் பிடதுவிளாவில்சூடுபோடவும்,

வல்லாளநோயின்குணம்.
நீர்வெந்து ரத்தம்போல் பிரங்கும்.
நிவர்த்தி.

தென்னம்பூம்பாளையது ஒன்றுவாங்கி
தேரினதாய்நெல்லிக்காய் படியேதாக்கி
இன்னிரண்டும்ஒன்றாக பிடித்துக்காடி
தண்ணீரில்கலக்கியிதை காட்டவேணும்
பின்னபடிமூன்றுநாள் தவாதீந்து
யெழுதிவைத்தபடி சூடு போடவேணும்
மன்னவனேபிடதுவிளா தன்னில்போடு
மாட்டிக்குஅபாயமில்லை மனம்கோகாதே.



8.

(வ-ம்,) நெல்லிக்காய் படி (௧) தென்னம்பாளை (௧) ஒன்றாயிடித்து காடித்தண்ணீரில் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும் பிட்டுவிலாவில் சூடவும்.

---

{ சாணத்துடன் உதிரம்விழும்வியாதிக்கு மருந்து நிவர்த்தி. }



நிலக்குமிளவேர்பட்டை பலமிரண்டு
நேரவேஅரைத்துபசுந் தயிரில்போட்டு
கலக்கியேகுடிப்பாட்ட வேணுமப்பா
கைகண்டமுறையிதுவே மூன்றுநாளும்
நிலவசங்களில்லாமல் செய்துபாரு
நெஞ்சியிலும்கழுத்தினிலும் சூடவேணும்
பலவிதமாய் யோசிக்கவேண்டாமையா
பாரிவிதைவிடவேரோ முறைதானுண்டோ.

(வ-ம்,) நிலக்குமிழிவேர் ௨-பலம் கொண்டுவந்து நேர அரைத்து பசுந்தயிரில் கலக்கிப் புகட்டவும், இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும் நெஞ்சிலும் கழுத்திலும் சூடவும்,

{ சீராழியின்குணம். சீராயிசங்கும் நாளுக்குநாள் உடல்கரைந்து மெலிந்துவிடும் நன்றாய் தீவனந்தின்றது, நிவர்த்தி. }

அஞ்சிபலம்சுருள்ளி யெடுத்துக்கொண்டு
ஈரஞ்சிபலஞ்சேறு கற்றாழைச்சோர்
கொஞ்சமடாமிளகுத்தூள் பலந்தானொன்று
கூடவேதிப்பிலித்தூள் பலந்தான்கூட்டு
துஞ்சவேஅரைத்துஜெலந் தனில்கலக்கி
தூயவனேயிந்தபடி மூன்றுநாள்தான்
அஞ்சாமல்குடிப்பாட்டி மூன்றுநாளில்
அப்பனேபிட்டுவிலா தன்னில்சூடே.



10

(வ-ம்,) மிளகுத்தூள் ௧-பலம், திப்பிலித்தூள் ௧-பலம், கத்தாழை சோறு ௰-பலம், சுருள்ளி ௫-பலம், ஒன்றாய்ப்போட்டு அரைத்து வெந்நீரில் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள்செய்து பிட்டு விலாவில் சூடவும்.

கோராவிக்கத்தின்குணம்,
நிவர்த்தி,

கன்னத்தில் வீங்கி இரைதின்னாது குன்னிக்கொண்டிருக்கும் இந்தப்பிரகாரமே விக்கத்திற் சுடவும். 

இதுபோல் கழுத்தில்சுடவும் - - - ௫

நெஞ்சில் பாறைபோல்வீங்கும் அதற்கு
மருந்துஞ் சூடும்போட நிவர்த்தி.

நல்லெண்ணெய்கால்படிதான் அளந்தெடுத்து
நல்லமஞ்சள்கிழங்குதனை யிடித்தசாறு
சொல்லுவதேநன் கால்படிசார்பிழிந்துக்கொண்டு
சோதித்தமிளகுபலம் ஒன்றுதூக்கி
கல்வத்திலரைத்துமுன் மருந்தில்தூவி
காய்ச்சியேஉள்ளுக்கு புகட்டுவாய்நீ
நல்முறையிதுபோலே மூன்றுநாளும்
கூட்டியபின்விக்கத்தில் சூடும்போடே.  11

(வ-ம்,) நல்லெண்ணெய் (வ) படியில் பச்சைமஞ்சள்கிழங்கை யிடித்தசாறு கால்படி பிழிந்து ஒருபலம் மிளகுந் தூள்செய்துபோட்டு காய்ச்சி கொடுக்கவும் இந்தமுறை மூன்றுநாள் செய்யவும் விக்கத்தி மேலேசூடுபோடவும்.

குடல்முறுக்குநோயின்குணம்.
கிடந்தயிடத்திலேகிடக்கும் காலைச்செருக்கும் சாணமிடும்.
நிவர்த்தி.

சாப்பாகல்லியிலைச்சாறு படிநாலொன்று
நல்லபசும்பாலதிலே படிதானொத்து
தோய்ந்தவெண்ணெயுருக்குநெய் படியரிக்கால்
தொக்கித்துகலக்கியிதை உள்ளுக்கேத்து
பேய்த்தனையாயிருக்காதீத மைத்தானெனில்
புலயிரண்டுஅபினிப்பட்டை நாடிதன்னில்
தோய்த்துநன்றாய்பூரலைத்து அரைத்துவிட்டு
தொடுத்திடுவாய்குடிநற்று நெஞ்சில்போடே.  12

(வ-ம்.) நாய்ப்பால் இலைச்சாறு படி-க, பசுவின்பால் படி-க, பசுநெய் படி அறிக்கால் ஒன்றாய்க்கலந்து புகட்டி மறுநாள் அகில்பட்டையை யிடித்து காடியில் ஊறவைத்து புகட்டவும்நெஞ்சில்சுடவும்.

---

ஈசல்முட்டிநோயின்குணம்.
நீவனக்கின்னாது பல்லை நெறநெறவென்றுகடிக்கும்
வயிருதும் கண்ணில்பீளைசாறும் இரத்தம்போல்நீர்வடியும்
புழுக்கைபோல் சாணம்போடும் நிவர்த்தி.

பிரண்டைதண்டுப்பிடியொன்று பரித்துக்கொண்டு
பேசியநோர்மதுக்காரை வேரின்பட்டை
இரண்டையுமேஇரண்டுபிடி ஒன்றாய்ச்சேர்த்து
யிடித்துநன்றாய் மயனம்போல்அரைத்துக்கொண்டு
திரமானகாடியிலேகலக்கியப்பா
தேக்கிடுவாயஎருதுக்கு மூன்றுநாளும்
இருபுரமும்கழுத்துமுதல் வால்வரைக்கும்
யிதுபோலேசூடிதற்கு யிழுத்துபோடே.



(வ-ம்.) பிரண்டைத்தண்டு பிடி-க, மதுக்காரைவேர்பட்டை பிடி-க இவைகளை மயனம்போல் அரைத்து காடியில்கலக்கி புகட்ட நீரும் கேடிசூட்டை கழுத்திலிருந்து வால்வரையிலும் யிழுத்துச்சுடவும்.

---

வெங்கொடிநோயின்குணம்.
உடல்நடுக்கும் மூக்கில்இரத்தம்விழும் குண்ணிக்கொண்டு
நிற்கும் இரைதின்னாது, நிவர்த்தி.

மதுக்காரைவேர்ப்பட்டையொடு வெள்ளைப்பூண்டு
மைந்தனேவகைக்குபலம் மூன்றுவாங்கு
பதாரேயெருதுக்கு வியாதியென்று
பலம்ஒன்றுவசம்புஅதின் கூடேசேர்த்து
பதமாகஅரைத்து வெந்நீரில்தாக்கி
பக்குவமாயிந்தமுறை மூன்றுநாள்தான்
இதிலுரைத்தபடிசூடு குறிப்புகண்டு
யிடத்திலாதனில்போட்டால் யேதுநோயே. 14



(வ-ம்.) மதுக்காரைவேர்பலம்-௩, வெள்ளைப்பூண்டு பலம்-௩, வசம்பு பலம்-௧, இவைகளையரைத்து இளவெந்நீரில் கலந்துபுகட்டவும்

த கூ-பலம் எடுத்து சிறுநீர்விட்டு பிடித்து உலர்த்தி சல்லாக் க
யை முடிந்து நாசியில் நசியமிடவும்.

{ ஊதடைப்பன் நோயின்குணம். வயறூதும் கண்சிவக்கும் வாயில்நீர்வடியும் இதைதின்றது நிவர்த்தி. }

மிளகிதற்குமொண்டுபலம் வேணும்வேணும்
மதுக்கரைவேர்பட்டைபலம் ஐந்துவேணும்
அளவிதற்குவெள்ளுள்ளி பலமிரண்டு
ஆகுமடாஒன்றாக அரைக்கவேணும்
தளாமனம்வேண்டாம்நீ காடியென்ற
தண்ணீரில்கரைத்தப்பா உள்ளுக்கேத்து
அளவாகயிந்தமுறை மூன்றுநாளும்
ஆனபின்னேயிடதுவிலா தன்னில்சூடே 15

(வ-ம்.) மிளகு பலம் - உ, மதுக்கரைவேர்பட்டை பலம்-ரு, வெள்ளுள்ளி பலம் உ, ஒன்றாக அரைத்து காடிநீரில் கரைத்து புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள்செய்யவும் இடது விலாவில் சூடவும்.

{ கல்வாரிநோயின்குணம். இரத்தமாய்நீர்விடும் நெருக்கு விக்கும், நிவர்த்தி. }

கல்வாரிநோய்தனக்கு பக்குவந்தான்
நங்கையரேஓரிலே தாமரைசமூலம்
வில்நேர்ந்தபுருவமுள்ள விழியணங்கே
விஷ்ணுகிராந்திசெடி யிவைஇரண்டும்
சொல்லுவதேனிருவகையுஞ்சமமாய்க்கொண்டு
சாபிடமோருவிட்டு பிடித்துநன்றாய்
புல்லேஒருபடிசார் பிழிந்துக்கொண்டு
புகட்டுவாயிந்தமுறை மூன்றுநாளே, 16

(வ-ம்.) விஷ்ணுகிராந்திசமூலமும் ஓரிலை தாமரைசமூலமும் சமமாய்க்கொண்டுவைத்து உரலில்போட்டு பசுவின்மோர்விட்டு பிடித்து ஒருபடி சார் பிழிந்துக்கொண்டு உள்ளுக்கு புகட்டவும் இந்தப்படி மூன்று செய்யவும் இதற்குசொல்லிய சூட்டை இடதுவிலாவில்சூடவும்.

## பாங்கிநோயின்குணம்.

தேகமெங்கும் கொப்பளம்போல் வெடித்
மீன்சிலம்புபோல் அசறும் ரோமமும் உதிரு

## நிவர்த்தி.

அத்திகனிப்பிஞ்சியிலே பலமிரண்டு
  அதிமதூரம்கூடவே பலமிரண்டு
பத்தினியேயிருள்ளி பலமிரண்டு
  பாங்கானலவுங்கபட்டை பலமிரண்டு
இத்தனையும்யிடித்துநன்றா யரைத்துக்கொண்டு
  யேந்திழையேகழுநீரில் கலக்கிக்காட்டி
மெத்தயில்லைமூன்றுநாள் யிந்தபாகம்
  மெல்லியரேநீரோட்டால் வேறேகேளே.

(வ-ம்.) அத்திப்பிஞ்சு அதிமதூரம் ஈருள்ளி இலவுங்
துகளை வகைக்கு (உ) பலம்வீதமாய் நிறுத்து ஒன்றாய்
த்து நன்றாய் அரைத்து கழுநீரில்கலக்கி புகட்டவும்
ய்துபார்க்கவேணும் நீராவிட்டால் வேறேபாகமும்

## இதுவுமது.

வேப்பிலையைஉரிவிவந்து உரலில்போட்டு
  விதமாகக்காடிவிட்டு யிடித்திடித்து
காப்பிட்டகாத்தாளே ஒரு ச்சார்
  கணக்காகவேபிழிந்து த்துக்கொண்டு
தோப்பிலுள்ள யீரவெ காயந்தன்னை
  துகளவேரெண்டுபலம் அரைத்துப்போட்டு
சாப்பிடவேயெருதுக்கு யிந்தபாகம்
  சடங்காமல்மூன்றுநாள் செய்துபாரே.

(வ-ம்.) வேப்பிலையை உரலில்போட்டு காடிவிட்டு
ஒருபடி சாறு பிழிந்துக்கொண்டு அதிலே ஈரவெங்கா
டுபலம் அரைத்துப்போட்டு கலக்கி உள்ளுக்கு புகட்
பிரகாரம் மூன்றுநாள் செய்யவுந் தீரும். இடது விலா
ல் சூடுபோடவும்.

நாறுநோயின் குணம்.
குன்னிக்கொண்டு நிற்கும் செவி தாழும்.
இதற்கு நிவர்த்தி,

முலைப்பால்தான்படியரிக்கால் கரந்துக்கொண்டு
முற்றினதோர் தேங்காய்ப்பால் படிதாமென்று
கலைவிழியின்நேராளே நல்லவெண்ணை
கால்படியேபோதுமிவை சொல்லக்கேளு
கலக்கிடுவாய்முப்பொருளும் ஒன்றாயூத்தி
கண்மணியே யிதுபோலே மூன்றுநாள்செய்



நிலைக்குமோ வந்தநோய் குடியேபோச்சு
நீயதற்கு யிருபுறமும் சூட்டைப்போடே. 19

(வ-ம்,) தேங்காய்ப்பால் ஒருபடி நல்லெண்ணை கால்படி முலைப்பால் அரிக்கால்படி ஒன்றாயூத்தி நன்றாய் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள்செய்யத் தீரும். இரண்டுபக்கம் விலாவிலும் சூடுபோடவும்.

மணிபேர் நோயின்குணம்



(வ-ம்,) கழுத்தைநக்கட்டிவீங்கும் நாசியடைத்துக் கிரட்டுக் கிரட்டென்று மூச்சுவிடும் இதற்கு யிந்தப் படிக்கு இடதுவிலாவில்சூடுபோடவும்.

தவளைநோயின்குணம்.
பிள்ளைகள் தவிழ்தல்போல்தவழும் காலாகாலும்
தள்ளாடும் பாரும் எழுந்திருக்கமாட்டாது.
இதற்கு நிவர்த்தி.



குப்பைமேனியிலை சமூலாவாரை
கொண்டுவா வகைக்குபலம் பத்துவீதம்
அப்படியேஉரலிலிட்டு யிடித்துக்கொண்டு
தேங்காய்கேகாடியிலே கலக்கினாலும்
கைப்பிடியாய்ப் பிழிந்துச்சார் யெடுத்தாலும்
கலவத்தில் மைபோலே அரைத்தாலும்
யெப்படியென்றாலுமுனை உள்ளுக்கேத்து
யிந்தபடி மூன்றுநாள் செய்துபாரே. 20

(வ-ம்.) குப்பைமேனியிலை ௰-பலம் சிறுகுலாவாரையிலை ௰ ...ழையை நன்றாயிடித்து காடிநீரில் கலக்கியாவது இடித்து ...ாவது அல்லது காடிவிட்டரைத்து உருண்டை செய்தாவ... ...க்கு கொடுக்கவும் இந்தப்பிரகாரம் மூன்றுநாள்செய்யவும் ...தப்படி வலதுவிலாவில் சூடுபோடவும்.

இதற்கே வேறுமுறை.

(வ-ம்.) தைவேளை ௰-பலம் குப்பைமேனியிலை ௰-பலம் ...லை ௰-பலம், மிளகு ஒருபலம், வெள்ளைப்பூண்டு நருபலம் ...ன்றா யரைத்து மொத்தைசெய்து உள்ளுக்கேத்த செ... ...ீரும்.

மேகாவிநோயின் குணம்.
நெஞ்சடைத்து தொண்டைக்கட்டி செருமும்,
நிவர்த்தி.

அன்னமேமிளகுத்தூள் பலமேயொன்று
அதுபோலே திப்பிலித்தூள் பலந்தானொன்று
சொர்ணமேபசுவின்நெய் [illegible]ழக்கும்பி
சோதிப்பாயெருதுக்கு கொடுத்துநீதான்
பின்னமேன்யிந்தமுறை மூன்றேநாள்தான்
பீத்துப்பார் கோவிந்த வார்த்தையேது
அன்னமேஇதிற்குறி[illegible]த்தன்னை
அடிவயிற்றிற்போ[illegible]ற னறிந்துகொள்ளே.

(வ-ம்.) [illegible]ருவிழ்மம [illegible] மையனை ...றைத்து பசுவின்நெயில் குளப்பி[illegible]ரும், இ... ...ன்றுநாள் செய்யவும் இதில கண்டிருக்கும் சூட்டைப்போ... ...ரென்கிற அடிவயிற்றில் சூடவும்.

கதவடைப்பன் நோயின்குணம்.
கொம்பைச்சுற்றிவீங்கும் வாய்திறவாது கண்சிவ...
நிவர்த்தி.

இந்தப்புடலங்காவு சொல்லக்கேளு
யேந்திழையே பெருங்காயம் பலமொன்று
சந்தமாய்நீர்விட்டு மைபோலாட்டி
சாரிப்பாய் பசுப்பால்தான் உழக்கேயோதும்

இந்தபடி கலக்கியதை யீந்துபோடு
யிதுபோலேமூன்றுநாள் செய்தேபாரு
வந்தநோய்சொல்லாம லோடும்பாரு
வாவென்றுஅழைத்தாலும் யிடந்தானேது, 22

(வ-ம்.) இந்துப்பு கால்பலம், பெருங்காயம் கால்பலம், மூன்றுபணை
த்து கால்படி பசும்பாலில் கலக்கி புகட்டவும் இதுபோல் மூன்றுநா
ளைக்கி கொடுக்கவும் தீரும்.

இடதுபக்கம் மேல்தொண்டைமுதல் வல
துகால்வரையிலும் இந்த சூட்டை யிழுத்துப்போ
டவும் அல்லது இந்தப்படிக்கே யிருவிலாவிலும்
சுடவும்.



கொம்பைசுற்றிவீங்கியிருக்குமென்று முன்கூறிய
நகொம்புமேல் உள்ளவீக்கத்தை சுற்றிச்சுடவும்.



தலைப்புதநோயின் குணம்.
காலைவெட்டிக்கொண்டு நிற்கும் மனிதனைப்பாயும்
உடல்மெலியும் பொய்மேச்சலாய்மேயும்,
நிவா[...]தி.

விளக்கெண்ணெகரியுப்பு வெள்[...]
வசம்புடனே அத்தியுடலேரின்பட்டை
அளவாககாயுரிவி யிலேயோடாறு
அளவெல்லாம்சொல்லுகிறேன் யிடிக்கவேணும்
களங்கமாஅரைத்துமுதல் யெண்ணெதன்னில்
கலக்கியேபுகட்டிவிட வியாதிபோச்சு
துலக்கமாய் யிடதுவிலா பக்கந்தானே
துஞ்சாமல் இதைப்போலே சூடும்போடே. 23



(வ-ம்.) விளக்கெண்ணெ படி-க, மற்றதெல்லாம் வகைக்கு ஒருபல
மீதமாக யெடுத்து யிடித்து நன்றாய்அரைத்து ஷெ எண்ணெயில் க
லக்கிப் புகட்டவும் தீரும் இந்தப்படி இடதுவிலாவில் சூடவும்.

அங்கிநோயின் குணம்.
இருவிழியும் இரத்தம்போல் சிவக்கும்.
நிவர்த்தி.

துளசியிலை ஐந்துபலம் நிறுத்தெடுத்து
நக்கவே அரைத்தாவின் மோரில்போட்டு
கலக்கியே புகட்டிவிடு வியாதிபோகும்
கண்மணியே இந்தமுறை மூன்றுநாள் செய்
துலக்கமாய் யிடதுவிலா பக்கமாக
தோற்றுகின்றபடி சூடு போட்டுவிட்டால்
நிலைக்குமோ வந்தநோய் குடியேபோச்சு
நேரிழையே யிந்தமுறை கைவிடாதே.

(வ-ம்.) துளசியிலை ஐந்துபலம் நிறுத்து அரைத்து பசுவின்மே ல்கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் செய்யத்தீரும் யிட லாவில் சூடவும்.

தாளுந்துநோயின் குணம்.
அருவருப்பாய் மேயும் மனங்கொண்டு யிரைதின்னாது
அடிக்கடி தண்ணீர்குடிக்கும் மனிதனைக்கண்டால்
பாயும் நிவர்த்தி.

முத்தினதோர் ஆவாரை யிலையானாலும்
மொய்குழலே பட்டையது அகப்பட்டாலும்
துவைத்துநன்றாய் படியரிக்கால் சார்பிழிந்து
தோகையரே நல்லெண்ணெ சமனாய்சேர்த்து
சித்தமதுகலங்காதே யீந்துபாரு
செருமடி நோய்களெல்லாம் பனியைப்போலே
மெத்தனவே யிந்தமுறை மூன்றுநாள்தான்
மெல்லியரே யிடதுவிலா தன்னில்போடே. 25

(வ-ம்.) முத்தின ஆவாரையிலையாவது பட்டையாவது யிடித்து அரிக்கால்படி சாறுபிழிந்து அதுபோலவே நல்லெண்ணெய் சேர்த்து கலந்து புகட்டவும் தீரும். மூன்றுநாளைக்கி யிந்தமுறைசெய்து பின் இடதுவிலாவில் சூடவும்.

செங்கநோயின்குணம்.
தலைக்குத்திட்டுநிற்கும் இரைதின்னாது.
நிவர்த்தி.

கர்ப்பூரவல்லிச்சார் படிதானென்று
கலக்கவே நல்லெண்ணெ படிதான்காது



த்தவெவாயிலாலே யிரண்டுமொன்றாய்
சேர்த்துப்புகட்டிவிட நோயுங்கேளு
விற்பூத்தவிழியாலே யிந்தபாகம்
விதமாகமூன்றுநாள் செய்தபின்பு
கற்பூத்தபடியிடது விலாவைப்பார்த்து
காச்சியேமாட்டிவிடு சூட்டைத்தானே. 26

(வ-ம்.) கற்பூரவல்லி சமூலங் கொண்டுவந்து யிடித்து படிசாறுபி ழிந்து அத்துடன்கூட கால்படி நல்லெண்ணை கலந்து புகட்டவுந்தீரு ம் இதுவேமுறை மூன்றுநாள்செய்யவும் இந்தப்படி இடதுவிலாவில் சூடவும்.

மூக்கடைப்பான் நோயின்குணம்.
மூக்கடைத்துக்கொண்டு குருகுருவெனச் செருமும்
அதற்கு நிவர்த்தி.

தைவேளையிலையோடு கரியும்பாகும்
வத்தயலசேகுப்பையிட மேனியாகும்
மைவிழியே கண்டங்கத்திரிப்பழந்தான்
கணக்கில்லை சமபாகம் வசம்புஞ்சேறு
இவகையும் சமமாக நிறுத்துக்கொண்டு
ஆரணங்கே சிறுநீர்விட் டிடித்துக்கொள்ளு
பையவே சீலையிலே முடிந்துகொண்டு
பக்குவமாய் நாசியிலே பிழிந்துபோடே. 27



(வ-ம்.) கண்டங்கத்திரிபழம் கரியுப்பு தைவேளையிலை வசம்பு குப்பைமேனியிலை இவைகளை சரியிடையாயெடுத்து சிறுநீர்விட்டு யிடித்து சீலையில் முடிந்து மூக்கில் பிழியத்தீரும். காண்டிரசம் பிழியலாம், இந்தப்படி இருவிலாவிலும் சூடவும்.

இந்தநோயின் குணம்,

(வ-ம்,) நாலுகாலும் தளர்ச்சியா யிருக்கும் இதற்கு நிவர்த்தி இதில்கண்டிருக்கிற சூலம்போல் நாலு காலி லும் முழங்கால்களிலும் நெஞ்சிலும் சூடிவிடத் தீரும்.



வேறு வியாதிக் குரியது,
கண்ணிலும் வாயிலும் நீர்வடியும் சாணமாய்பீசும்
கழியும் நாற்றமடிக்கும் நிவர்த்தி,

வெண்டமென்ற செடியினிட கொழுந்துவாங்கு
பேய்த்தமைபே விளாயிலையும் வகைதான்சேண்டு

கொண்டுவா மும்மூன்று பிடியிரண்டும்
ட்டிவிடு மூன்றுபடி தண்ணீர்க்குள்ளே
ண்டிடும்படிபோலே கலக்கிப்போடு
செலுத்திவிடு உள்ளுக்கு பிதுவேயாகும்
ண்டபடி உழலாதே மூன்றுநாளும்
கருத்தாக யிந்தமுறை தந்துபாரே.

(வ-ம்.) விளாயிலை மூன்றுபிடியும் இண்டங்கொழுந்து மூன்று
கொண்டுவந்து அரைத்து மூன்றுபடி தண்ணீரில் கலக்கி புக
வுந் தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும் இடது விலா
றுபோடவும்.

கொக்கைநோயின்குணம்.
வயிறூதும் அருவருப்பாய் மேயும் செவிதாழும்
நிவர்த்தி.

யேலமொடு மிளகு கருஞ்சீரகந்தான்
யேத்திழையே நல்லசீரகமும் சுக்கு
சாலவே யிவையெல்லாம் வகைவகைக்கு
சரியாகபலம்ஒன்றாய் நிறுத்துவந்து
கோலமாயரைத்ததனை வழித்துக்கொண்டு
கொடுத்திடுவாய் சிறுநீரில் கலக்கியேதான்
நாவிடமாம் செவிநாசி கண்களுக்கும்
நாயகமே மும்மூன்று துளிதான்தாக்கே. 36

(வ-ம்.) கருஞ்சீரகம் நற்சீரகம் சுக்கு மிளகு ஏலம் வகைக் கொருபல
ம்வீதமாய் கொண்டுவந்து பிடித்து அரைத்து சிறுநீர்விட்டு கலக்கி
புகட்டவும் உடனே கண் செவி நாசி இவைகளில் மும்மூன்று துளிவிட
வும் இந்தப்படி மூன்றுநாள் செய்யவும்தீரும் இதுபிரகாரம் இருவிலா
விலும் சூலைப் பற்றியும் சுடவும்.

வாய்கிரந்திநோயின் குணம்.
வாய்விங்கும் வாயில் நீர்வடியும் நிவர்த்தி.

(வ-ம்.) கருணைக்கிழங்கு அல்லது காட்டுக் கருணைக்கிழ
ங்கு இ-பலம் கொண்டுவந்து அரைத்து மோரில்கலக்கி பு
கட்டவும் இந்தப்படி நாவில் சுடவும்.

உதிரிநோயின் குணம், மயிரைச் சிலிர்த்துக்கொள்ளும் அடிக்கடி கழியும் தண்ணீராயுங்கழியும் நிவர்த்தி.

(வ-ம்.) விடத்தலைக்கொழுந்து ២-பலம் சருள்ளி ២-பலம் இவைகளை அரைத்து எருமைமோரில் கலக்கிக்கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள்கொடுக்கத் தீரும் இதுபோல் இடதுவிலாவில் சுடவும்.



{ தலைநோ மூக்கடைப்பன் குணம். மூக்கடைத்து கெட்டிமூச்செரியும் தமோறும் நிவர்த்தி. }

(வ-ம்,). மிளகு திப்பிலி சித்திரமூலம் இதுகள் சமமாய்யெடுத்து அரைத்து சிறுநீர்விட்டு கலந்து நாசியில்பிழியவும் தீரும்.

இந்தப்படி மூக்கில்சுடவும்; " " " "



இந்தப்படி தலைசுற்றிச் சுடவும் " " "



{ அம்மணிச் சிலந்தியின்குணம்,
முன்னங்கால்முதல் தொப்புள்வரையும் வீங்கும்.
நிவர்த்தி, }

தலைச்சுருளிவேர் ௬-பலம், வள்ளிவேர்பட்டை ௬-பலம் ஒன்றுபடவரைத்து வென்னீரிலே கலக்கி புகட்டவும் தீரும், ஷை. இரண்டுவேரும் அரைத்து வீக்கத்தில் தடவிவரத்தீரும் இந்தப்படி நெஞ்சில் சுடவும்,



{ நாணைக்கால் நோயின்குணம், வயறுவீங்கும் வாயில்நீர்வடியும் மயிர் சிலிர்க்கும் கால்வளையும் கூனிநிற்கும் திமிராது நிவர்த்தி, }

(வ-ம்,) நாணைப்பழுப்பு சருள்ளி சமமாயிடித்து அரைபடி சாறு பிழிந்து கட்டவும் மூன்றுநாள் செய்யத் தீரும்,

இந்தப்படி இடதுவிலாவில் சூடுபோடவும்,

ஓம்ஸ்ரீ

மாட்டின்வாகடக்கண்ணாடி

முதற்பாகம்

முற்றிற்று.

---

இனி இரண்டாம்பாகம் வேறேவரும்.

...மிருகத்தை முதுகில்ட்டுத் திருப்பி, ...
...ண்ணுக்குள் கலந்து கரைத்து கடலைத்தூள் விட்டால்
...த்தையில் வாய்க்கிழங்கு இந்தப்படிக்கு இரண்டு ...
...ரம் வார்த்தால் குணமாகும். குடல் வலி யிருந்தால்
...லோடிப்போகும். கைகண்டமுறை.

...டி பலவீனத்தால் மெத்த இளைத்திருந்தாலும், அல்லது
...ஷடியாய் நினைப்பிடித்துத் தின்னும் காருக்குதான் ...
...ருந்தாலும் புஷ்டியாகும்படியான—தாதுமருந்து. அல்...

...ளக்கத்தை அரிசியாவது உளுந்தாவது வகைக்குபடி ½, பனங்...
...டி, வெங்காயம் பலம் 10, மூக்குறிஞ்சி வெங்காயத்தை தோலுட...
...போட்டு பொடியாயரித்து ஜெகநிலைக்குடுவையில் கலந்து 10-தேங்...
...ம்பிக்பால் பிழிந்துபிசைந்து தேங்காய்ப்பிரமாணம் உருண்டை
...துவை புஷ்டியாகும்.

...ல்லாமணி மற்ற ருணவிதம்,—ஆதிவாரத்தோறும் ஆழாக்குநீரில்
...ட்டு காணேகுழைத்துக் கரைத்து சுமார்-ஒருபடி-பாலு உள்ளுக்கு
...க்கு-இப்படி இரண்டு, மூன்றுமுறை செய்யவும், கைகண்ட
...ம.

...மாட்டிக்கு கண்ணிலே பூவிழுந்தால் செய்யவேண்டியபக்குவம்,
...ட்டுப்படியாகவின்பாலில் ஆழாக்குஉப்புபோட்டு கன்றாய்க்கண்டக்
...மைபோலரைத்துப்பத்துநாளைக்குகண்ணில் போட்டுவர க
...துபோகும்.

...நூலத்தின் குணம்"—உட்காந்தாப்போல சாணயிடும், பக்குவ...
...வேப்பந்துமொட்டியிலையும், இளிஞ்சித்தை அரைத்து கழுநீரில் கரை
...க்கொடுக்கவும்,

...சிறை வெப்பையின்குணம்"—மூக்கிலே தண்ணீர்விழும், வெடி...
...ம், உடைப்புசுடும், மேயமாட்டாது. பக்குவம்.—எள்ளுஅரைநாழி
...டகுளிர்பாலிற் போட்டு நூறவைத்து கரைத்துக்கொடுக்கவும்

"மாட்டுக்குகழுத்துப்புடிப்பு கண்டால்"—பக்குவம்—எருக்கன்
...ட்டன் கல்லெலும்பை அல்லது விளக்கெண்ணெய்சேர்த்து ...
...முறுக்குவரையில் தடவி இருபக்கமுங்கழுத்தும் ...
...களில் சூடுபோடவும், சொஸ்தமாகும்,

கடவுள் துணை.

# வசனமாகச் சொல்லிய மாட்டின்வாகடக்கண்ணாடி.

## மாட்டுக்கு நோய்வண்டாமலிருப்பதற்கு செய்ய வேண்டிய சாந்தி.

செவ்வாய்க்கிழமையில், சிவனார்கிழங்குகொண்டுவந்து, கொட்டாயிற் கட்டித்தறியண்டையில் பொங்கலிட்டுப்பொங்கலைசாதமும் கிழங்குங்கட்டித்தறியிலும், வாசற்படியிலும் புதைத்துவைக்கவேண்டும். எப்படிப்பட்ட நோயும்வாரொட்டாமற்காக்கும்.

## கோமாரிக்குச்சாந்தி.

திங்கட்கிழமையிற் கொடிவேலிவேரைப் பறித்துக்கொண்டுவந்து செவ்வாய்க்கிழமை உதையத்துக்கு முன்வாசலிற்பொங்கலிட்டு பொங்கலோடுகூட்டிவைத்து வாசலிலுங் கொட்டாயிலும் புதைக்க சாந்தியாகும்.

## புல்தின்னும் கிடைத்திருமாகில் "வெக்கையென்று" பெயர்.

பக்குவம்—கற்பூரவள்ளியிலைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்து உள்ளுக்கு கொடுத்து விளாவில் சூடு சொஸ்தமாகும்.

## நாவுகாலும் வீங்குமாகில் "ஆணவாதம்" என்றுபெயர்.

மூலிகைத்தைலம்—எந்த உபமானவரானாலும் பட்டி என்கிற ஊரிலிருக்கும் சதுரக்கள்ளியில் ஒரு கிளை வெட்டிக் கொண்டுவந்து துண்டுதுண்டாயறுத்து ஒரு மண் பாண்டத்திற்போட்டு அதற்கு தண்ணீர்வார்த்து குறுணிதண்ணீராகக் காய்ச்சி யிறக்கி வைத்து ஒரு பெரிய சட்டியில் மூடி குப்பையிலுக்கு இடத்தே பள்ளந்தோண்டி அப்பள்ளத்துக்குள் இரண்டுநாளைக்கு புதைத்து வைத்து—மூன்றும் நாளெடுத்து கையிலுல் தண்ணீராத்துழாவி மூன்றுநாள் உள்ளுக்கு கொடுக்க சொஸ்தமாகும்.

## குறட்டைவிடுமாட்டுக்கு பக்குவம்.

மாட்டை பதினைந்து தரையிற்றள்ளி எருமுட்டைநெருப்புக் குவியலில் எருக்கம்பழுப்பொன்றை நுழையவைத்து எடுத்த